பதிவு எண். M. 6311 ★ தொலைபேசி: 61331 ★ நிறுவியது: 1953 ★ [illegible] ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 19] சென்னை: ஐப்பசி 27 (13—11—71) சனி   வெளியூர்: ஐப்பசி 28 (14—11—71) ஞாயிறு [இதழ்: 126

போர் மூண்டால்...

அமெரிக்காவின் நிலை என்ன?

வாஷிங்டன், நவ. 13—

இந்தியாவுக்கும் -- பாகிஸ்தானுக்கும் இடையே போர் மூளுமானால், அதில் சேராமல் விலகியிருப்பதற்குத் தன்னால் இயன்ற அனைத்தையும் அமெரிக்கா செய்யும்"

என்று அமெரிக்க வெளிவிவகாரச் செயலாளர் வில்லியம் ரோஜர்ஸ் கூறினார்.

தொழிற் சங்கத் தலைவர்களுக்கு மத்திய அமைச்சர் எச்சரிக்கை

'சூழ்நிலைகளுக்கேற்ப தங்கள் செயல் முறைகளை மாற்றிக்கொள்வது அவசியம்' என வலியுறுத்தல்

புதுடில்லி, நவ. 13—

'இன்றைய சூழ்நிலைக்குத் தகுந்தவாறு தங்கள் கொள்கைகளையும் -- செயல் முறைகளையும் தொழிற் சங்கத் தலைவர்கள் மாற்றிக் கொள்ளவில்லையென்றால், அவர்கள் வெளியேற்றப்பட்டு, அங்கு புதிய தலைமுறையினர் இடம் பிடித்துக்கொள்ளுவர்"

என்று, மத்திய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் ஆர். கே. காடில்கார் இங்கு எச்சரிக்கை விடுத்தார்.

'தொழிற் சங்க இயக்கத்தை நவீனப்படுத்துவது' என்ற பொருள் குறித்து நடத்தப்பட்ட கருத்தரங்கில் பேசுகையில் அவர் மேலும் கூறியதாவது:—

"நாம் பொதுத் துறையை மேலும் வளர்த்துக்கொண்டு வருகிறோம்; நாட்டின் பொருளாதாரத்தைக் கணிசமாக உயர்த்துவதில் பொதுத் துறை தொழில்களுக்குப் பெரும் பங்கு உண்டு; ஆகவே, அவைகள் மீது தொழிற் சங்கத் தலைவர்களின் மனப்போக்கில் மாற்றம் ஏற்படவேண்டியது அவசியமாகும்.

தொழிலாளர்கட்கு, அவர்களது கடமைகளை உணர்த்தத் தொழிற் சங்கத் தலைவர்கள் தவறிவிடுகிறார்கள்.

அலுவலக நேரம் காண்டீனில் இருப்பதற்கே என்றும், அலுவலக நேரம் முடிந்தபின் வேலை செய்து, 'ஓவர் டைம்' பெற வேண்டுமென்றும் பெரும்பாலான தொழிலாளர்கள் கருதுகின்றனர்; இக் கருத்தை மாற்றுவதற்குத் தொழிற் சங்கத் தலைவர்கள் முன்வர வேண்டும்."

பாகிஸ்தானுக்குச் செஞ்சீன அறிவுரை

நிதானத்துடன் செயல்படுமாறு வலியுறுத்தல்

புதுடில்லி நவ. 13

"கிழக்கு வங்காளப் பிரச்சினையில் நிதானமாக நடந்து கொள்ள வேண்டும்; இப் பிரச்சினைக்கு ஒரு அரசியல் தீர்வு காண முயற்சிக்க வேண்டும்"

என்று பாகிஸ்தானுக்கு சீனா ஆலோசனை கூறியிருக்கிறது என்று 'இலண்டன் டைம்ஸ்' பத்திரிகையின் இராவல்பிண்டி நிருபர் கூறியிருக்கிறார்.

"பாகிஸ்தான், எந்தச் சந்தர்ப்பத்திலும் இந்தியாவைத் தாக்கக்கூடாது என்றும் சீனா ஆலோசனை கூறியிருக்கிறது.

"கிழக்கு வங்காளப் பிரச்சினையை ஐ. நா. பாதுகாப்புச் சபையில் எழுப்ப இது உரிய நேரம் அல்ல"

என்றும் சீனா கூறியிருப்பதாக அவர் கூறுகிறார்.

முஜிபுரை விடுதலை செய்க!

கராச்சியில் கோரிக்கை

கராச்சி, நவ. 13—

காவலில் வைக்கப்பட்டிருக்கும் முஜிபுர் ரகிமானை விடுதலை செய்ய வேண்டும் என்று கோரி நடத்தப்படும் இயக்கத்திற்குத் தாங்கள் ஆதரவு அளிப்பதாக கராச்சியிலுள்ள 24 சங்கங்கள் அறிவித்திருக்கின்றன.

ரகிமானை விடுதலை செய்யுமாறு வற்புறுத்தி இதுவரை இரு வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டிருக்கின்றன.

மக்கள் விரும்பினால் முஜிபுர் ரகிமானை விடுதலை செய்யத் தாம் தயாராக இருப்பதாக அதிபர் யாகியாகான் அமெரிக்கப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியின்போது குறிப்பிட்டிருந்ததற்கேற்பஇந்த வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டிருக்கின்றன.

திருச்செந்தூர் தொகுதி-- ஆட்சேபனை மனுமீது திங்களன்று தீர்ப்பு

சென்னை, நவ 13—

திருச்செந்தூர் மக்களவைத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட தி. மு. கழக உறுப்பினர் எம். எஸ். சிவசாமியின் தேர்தல் செல்லாது என்று ஆட்சேபித்து, அத்தொகுதியில் போட்டியிட்டுத் தோல்வியடைந்த டாக்டர் மத்தியாஸ் தாக்கல் செய்த மனுமீது உயர் நீதிமன்ற நீதிபதி என். எஸ். இராமசாமி திங்கட்கிழமை தீர்ப்புக் கூறுவார்.

தடை செய்யப்பட்ட பகுதிகள்

தமிழ்நாடு அரசு அறிவிப்பு

சென்னை, நவ. 13—

சில பகுதிகள் குறித்த தகவல்கள் எதிரிகளுக்குக் கிடைப்பது ஆபத்து எனக் கருதி அப்பகுதிகளை, 'தடை செய்யப்பட்ட பகுதி' யாகத் தமிழ்நாடு அரசு அறிவித்திருக்கிறது.

இதன்படி, கன்னியாகுமரி – நீலகிரி -- திருநெல்வேலி மாவட்டங்களிலுள்ள மின் உற்பத்தி நிலையங்கள் -- லைட் அவுஸ் போன்ற முக்கிய இடங்களைத் தடைசெய்யப்பட்ட இடங்களாக அறிவித்திருக்கிறது.

பிளேக் நோய்த் தடுப்பு மருந்து

இலண்டனிலிருந்து சென்னை வந்து சேர்ந்தது

சென்னை, நவ. 13—

பிளேக் நோய்த் தடுப்புக்காக 15,000 குப்பி மருந்து இலண்டனிலிருந்து நேற்று சென்னை வந்து சேர்ந்தது.

இவற்றில் 10,000 குப்பிகள் இரயில் மூலம் இன்று திருப்பூருக்கு அனுப்பிவைக்கப்பட்டது; அங்கிருந்து தேவைப்படும் இடங்களுக்கு அவைகள் அனுப்பிவைக்கப்படும்.

2 000 குப்பி மருந்து சென்னையிலேயே வைத்திருக்கப்படும்.

இவை தவிர, பாக்கி 3,000 குப்பி மருந்து கேரளத்துக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது.

இந்தியாவின் விமான எதிர்ப்புப் பீரங்கிகள்

நடவடிக்கையில் இறங்கின

புதுடில்லி, நவ. 13—

ஜம்மு பகுதியில் பாகிஸ்தான் விமானங்கள் நேற்று மூன்று முறை இந்திய வான வீதியில் அத்துமீறிப் புகுந்தன.

இந்திய விமான எதிர்ப்புப் பீரங்கிகள் அவற்றை நோக்கிச் சுட்டன; ஆனால் பாகிஸ்தான் விமானம் தாக்கப்பட்டதா என்பது தெரியவில்லை.

பெரும் அளவில் பாகிஸ்தான் படைகள் குவிகின்றன

பிரோஜ்பூர், நவ. 13—

பாகிஸ்தான் படைகள் தங்களது பகுதியில் புதிய புதை குழிகளை அமைத்திருக்கின்றன.

சில புதை குழிகள் எல்லைக் கம்பங்களுக்கு மிக அருகாமையில் உள்ளன.

லாகூரிலிருந்து காசூர் வரை பாகிஸ்தான் படைகள் பெரும் அளவில் குவிக்கப்பட்டிருக்கின்றன.

லாகூருக்கு அப்பால் வெளிப் பகுதியில் பாகிஸ்தான் கவசப் படை நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன.

அந்நியர்கட்கு வேலை வாய்ப்பு இனி இல்லை

இலண்டன், நவ. 13—

பிரிட்டனில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாயிருப்பதால், அயல்நாடுகளைச் சேர்ந்த பயிற்சி பெற்ற நபர்களுக்கும், ஓரளவு பயிற்சி பெற்ற நபர்களுக்கும் பிரிட்டனில் வேலை செய்வதற்காக சனவரி 1-ந்தேதியிலிருந்து 'பெர்மிட்டு'கள் வழங்கப் போவதில்லை என்று பிரிட்டிஷ் அரசு அறிவித்துள்ளது

இராம. அரங்கண்ணல் சென்னை வருகை

சென்னை, நவ. 13—

குடிசை மாற்று வாரியத் தலைவர் திரு. இராம. அரங்கண்ணல் எம்.எல்.ஏ. அவர்கள், சிங்கப்பூரிலிருந்து இன்று இரவு 9-மணியளவில் மீனம்பாக்கம் விமான நிலையத்தில் வந்திறங்குவார்.

அமெரிக்காவில் தமிழ்நாடு முதலமைச்சர்

முக்கிய அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை

வங்கதேசப் பிரச்சினையில் கொள்கை நிலை விளக்கம்

நியூயார்க், நவ. 13—

அமெரிக்காவில் சுற்றுப்பயணம் செய்துவரும் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு, அமெரிக்க அரசு நேற்று சிறப்பு விருந்து ஒன்றை அளித்தது; அதுபோது கலைஞர் அவர்கள், அந்நிகழ்ச்சியில் கலந்துகொண்ட அமெரிக்க அரசின் முதிர்ந்த அதிகாரிகளிடம், வங்க தேசப் பிரச்சினையில் இந்தியா மேற்கொண்டுள்ள கொள்கைகளை எடுத்துக்கூறி விளக்கினார்.

பிற்பகலில் கலைஞர் அவர்கள், செனட் உறுப்பினர்கள் எட்வர்ட் கென்னடி--பாப்டோல், சாக்ஸ்பி ஆகியோரையும், மற்றும் அமெரிக்க நாடாளுமன்ற மேலவை உறுப்பினர் கல்லாகரையும் சந்தித்தார்; கல்லாகர், ஆசிய விவகாரங்கள் பற்றிய துணைக் குழுவின் தலைவராவார்

கலைஞர் நடத்திய பேச்சுவார்த்தைகள், பெரும் அளவில் பயன்படக்கூடியதாக இருந்ததாகக் கருதப்படுகிறது.

முதலமைச்சர் கலைஞர் அமெரிக்க வெளிவிவகாரத் துறை அதிகாரிகளைச் சந்தித்துப் பேசுகையில், அமெரிக்காவில் மத்திய அரசுக்கும் -- மாநில அரசுக்குமிடையே அதிகாரப் பங்கீடு எவ்வாறு செய்யப்பட்டிருக்கிறது என்பதையும் விரிவாக விவாதித்தார்.

தொடர்ந்து அவர், அமெரிக்காவின் பல்வேறு மாநிலங்களுக்குச் சுற்றுப்பயணம் செய்யும்போது அந்தந்த மாநில நிர்வாகங்கள் எவ்வாறு செயல்படுகின்றன என்பதுபற்றி நேரில் கண்டறிவார்.

அமெரிக்க நாட்டில் நகர்ப்புறங்கள் எவ்வாறு வளர்ச்சியடைந்துள்ளன -- அவை தமது பிரச்சினைகளை எவ்வாறு தீர்த்து வருகின்றன -- தொழிலாளர் -- முதலாளி உறவு அமெரிக்காவில் எப்படி சுமூகமாக வைத்துக்கொள்ளப்படுகிறது -- வேளாண்மைத் துறையில் உள்ள பிரச்சினைகள் என்னென்ன -- என்பவைகளை எல்லாம் முதல்வர் கலைஞர் நேரடியாகக் காண்பார்.

நேற்று முதல்வர், 'மெல்டீஸ் வில்லி' என்ற இடத்திலுள்ள விவசாயப் பண்ணையைப் பார்வையிட்டார்; இந்தப் பண்ணை உலகிலேயே மிகப் பெரிய விவசாயப் பண்ணை என்று கருதப்படுகிறது.

இந்தப் பண்ணையைப் பார்வையிட்டு முடிந்தபின், பால்டிமோர் நகருக்குப் பயணமானார்; அங்கேயுள்ள ஜான்ஸ் ஹாப்கின்ஸ் மருத்துவ விஞ்ஞானக் கழகத்தில் கண்ணைப் பரிசோதனை செய்துகொள்கிறார்.

கிழக்கு வங்கத்தை இழப்பது உறுதியாகிவிட்டது

மேற்கு எல்லையில் ஆக்கிரமிப்புக்குப் பாகிஸ்தான் முயற்சி

ஜெர்மனியில் இந்திரா காந்தி நிலைமை விளக்கம்

பான், நவ. 12—

"கிழக்கு வங்காளத்தை எப்படியும் இழந்துவிடப் போகிறோம் என்ற அச்சத்தில் — அதற்கு ஈடுசெய்வதற்காக மேற்கு இந்தியாவில் ஒரு பகுதியை ஏன் பிடித்துக்கொள்ளக் கூடாது என்ற தோரணையில் பாகிஸ்தானிலிருந்து வெளிவரும் செய்திகள் இருப்பதால், எல்லைகளைப் பாதுகாப்பின்றி நாங்கள் விடுவதற்கில்லை.

"இந்தியாவின் மேற்கு எல்லையை இந்தியப் படைகள் தொடர்ந்து பாதுகாத்து வரும்; அங்கிருந்து படைகளைத் திரும்பப் பெறுவதென்றால், எங்கள் நாட்டைப் பாதுகாப்பதற்கு உண்மையாக — போதுமான அளவுக்கு வேறு வழியில்லாமல் போய்விடும்.

"போரினால் எந்தப் பிரச்சினைக்கும் தீர்வு காண முடியாதென்று இந்தியா நம்புகிறது; ஆனால், எங்கள் எல்லைகளைப் பாதுகாப்பின்றி விட்டு வைக்க முடியாது"

என்று தலைமையமைச்சர் இந்திரா காந்தி, மேற்கு ஜெர்மனியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் ஆற்றிய உரை ஒன்றில் தெளிவுபடக் குறிப்பிட்டார்; இதன் தொடர்பில் மேலும் அவர் கூறியதாவது:—

"மேற்குப் பகுதி எல்லையில், 'பயிற்சிக்காக' என்று சொல்லி பாகிஸ்தான் படைகளைக் குவித்த பிறகுதான் இந்தியாவின் படைகள் முதன்முதலாக மேற்கு எல்லைக்குக் கொண்டு போகப்பட்டன; இதை நீங்கள் நம்பமாட்டீர்கள்; ஒரு வாரம் பொறுத்திருந்து பார்த்தோம்; அந்தப் படைகளுக்குத் திரும்பிச் செல்ல வேண்டும் என்ற எண்ணம் அறவே இல்லை என்று தெரிந்து கொண்ட பின்னர்தான், 'எல்லை வரையில் நமது படைகளையும் கொண்டு போகவேண்டும்' என்ற கட்டாயம் இந்தியாவுக்கு ஏற்பட்டது.

"கிழக்கு வங்காளத்தில் தேசியத்தின் எழுச்சி பரவிவிட்டது; தங்கள் விமோசனத்தைத் தாங்களே தேடிக்கொள்ள வேண்டுமென்று கிழக்கு வங்காள மக்கள் கருதுகிறார்கள்; ஆகவே, கிழக்கு வங்காள மக்கள் ஏற்றுக் கொண்டாலன்றி, எந்தச் சமாதானமும் அங்கு நிலைத்து நிற்காது."

ஹேஷ்யம் கூறுவதற்கு எவராலும் இயலாது

"கிழக்கு வங்கம் தனது கையை விட்டுப் போய்விடும் என்பதால் மேற்கு எல்லையில் பாகிஸ்தான் தாக்கும் என்று நினைக்கிறீர்களா?"

என்று நிருபர்கள் கேட்டபோது தலைமையமைச்சர் கூறியதாவது:—

"மேலை நாடுகளின் பத்திரிகையில் இம்மாதிரி கூறப்பட்டிருப்பதை நான் படித்தேன்; கிழக்கு வங்கத்திலோ அல்லது மேற்கு பாகிஸ்தானிலோ பயணம் செய்திருப்பவர்கள் இந்தக் கருத்தை வெளியிட்டிருக்கின்றனர்; 'இந்தச் சாத்தியக்கூறு உள்ளது; ஆனால் இதுபோன்ற பிரச்சினையில் யாரும் ஹேஷ்யம் சொல்வதற்கில்லை."

டாஷ்கெண்ட்--பரிகாரமல்ல!

"தற்போதுள்ள நெருக்கடிக்கு மற்றொரு டாஷ்கெண்ட் முறை பேச்சோ -- ஒப்பந்தமோ, பரிகாரமாகாது"

என்றும் தலைமையமைச்சர் கண்டிப்பாகக் கூறிவிட்டார்.

யாகியா கான் உணருவாரா?

"இந்தியாவுக்கும் — பாகிஸ்தானுக்குமிடையில் போர் மூளாமல் தடுக்க மேற்கு ஜெர்மனி தலைமையமைச்சர் தமது செல்வாக்கைப் பயன்படுத்த ஒப்புக் கொண்டிருக்கிறீர்களா?"

என்று நிருபர்கள் கேட்டபோது இந்திரா காந்தி கூறியதாவது:—

"கிழக்கு வங்க மக்கள் ஏற்கக் கூடிய அரசியல் தீர்வினால் மட்டுமே நிலையான -- அனுபவ சாத்தியமான பரிகாரம் ஏற்பட முடியும் என்பதைப் பாகிஸ்தானின் இராணுவ ஆட்சியாளர்களுக்கு யாராவது உணர்த்த முடியுமானால், அது நிச்சயமாக வரவேற்க வேண்டியதேயாகும் என்று நாங்கள் எப்போதுமே கூறிவந்திருக்கிறோம்.

"என்னுடைய நல்லெண்ணச் சுற்றுப்பயணத்தின்போது, சம்பந்தப்பட்ட நாடுகளின் தலைவர்களிடம், இந்தியத் துணைக் கண்டத்தில் உள்ள நிலைமை பற்றி என்னுடைய மதிப்பீட்டை எடுத்துரைத்திருக்கிறேன்.

"உலகத்தின் கருத்து ஒரு குறிப்பிட்ட அளவில் இருக்கிறது என்பதை யாகியா கான் உணருவாரேயானால், அது அவரிடம் ஏசேனும் பலனை ஏற்படுத்தக் கூடும்.

அலட்சியப் போக்கு எதற்கும் பயன்படாது

"கிழக்கு வங்கத்தில் சனநாயக பூர்வமாக நடைபெற்ற ஒரு தேர்தலின் முடிவை ஒன்றும் இல்லாமல் செய்வது சரியாகுமா என்பதையெல்லாம் அவர்கள் யோசிக்கத் தயாராக இருக்க வேண்டும்; அடிப்படையான இந்த உண்மையை அலட்சியம் செய்தால் பரிகாரம் காண முடியாது.

ஒருமனதான கவனத்தை உலகம் செலுத்துகிறது

"கிழக்கு வங்கத்தில் நடந்த படுகொலைகளை முதன்முதலாக, உலகத்தின் கவனத்துக்கு இந்தியா கொண்டுவந்தபோது, 'அது, பாகிஸ்தானுடைய உள்நாட்டு விவகாரம்' என்று கூறப்பட்டது; ஆனால் இப்போது, 'ஐ. நா. பார்வையாளர்கள் எல்லைக்குச் சென்று உண்மை நிலையை நேரில் பார்க்க முடியுமா என்பதில் உலகம் ஒருமனதான கவனம் செலுத்தத் துவங்கியிருக்கிறது.

பிரச்சினை எப்படித் தீருவதற்கு இயலும்?

"ஆனால், கிழக்கு வங்காளத்தில் உள்ள நிலைமை மாறி அகதிகள் திரும்பிப் போவதற்கான சூழ்நிலை ஏற்பட்டால் தவிர, பிரச்சினையைத் தீர்க்க முடியாது; கிழக்கு வங்காளத்தின் அரசியல் எதிர்காலத்தைத் தீர்மானிக்க வேண்டியவர்கள் கிழக்கு வங்க மக்கள்தான்; ஆனால் அதே நேரத்தில் கிழக்கு வங்கத்தில் மேற்குப் பாகிஸ்தான் இராணுவ ஆட்சியினர் செய்திருக்கும் கொடுமைகளைப் பார்க்கும்போது பாகிஸ்தான் ஒன்றுபட்டிருப்பது சந்தேகம்தான்!"

இடமளிக்க முடியுமா?

கேள்வி:—"யாகியாகான் உடும்புப் பிடியாக இருந்தால், இந்தியா அகதிகளைக் கட்டாயப்படுத்தித் திருப்பி அனுப்பிவிடுமா?"

இந்திரா காந்தி:—"எந்த நாடும் தன்னுடைய நலன் பாதிக்கப்படுவதற்கு இடமளிக்க முடியாது; இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் என்ன பரிகாரம் காணப்படும் என்பதை ஒரு நிருபர்கள் கூட்டத்தில் விவாதித்துக் கொண்டிருக்க முடியாது."

போரைத் தவிர்க்க இயன்றதைச் செய்வோம்

கேள்வி:— "பாகிஸ்தானுடன் போர் ஏற்படுமா?"

பதில்:—"இராது என்று நம்புகிறேன்; போரைத் தவிர்ப்பதற்கு எங்களால் இயன்றதை எல்லாம் செய்வோம்; பாகிஸ்தான் படைகள் எல்லைப்புறங்களுக்கு அனுப்பப்பட்ட பிறகுதான் எங்கள் படைகளை எல்லைகளுக்கு அனுப்பினோம்; இரு முறை பாகிஸ்தான் எங்களைத் தாக்கியிருக்கிறது; இரு முறையும் எதிர்பாராதவிதத்தில் தாக்குதல் நடந்தன; 'அரசின் தலைவி' என்ற முறையில் என் நாட்டின் பாதுகாப்பை எச்சரிக்கையுடன் கவனித்துக்கொள்ள வேண்டியது என்னுடைய கடமையாகும்; என் நாட்டு மக்களுக்குக் குறைந்தபட்சமாக நான் செய்யக்கூடியது அதுதான்."

பலன் ஏற்படுமானால் செய்ய வேண்டியதுதான்

கேள்வி:—"வங்க தேசத்துக்கு இந்தியா அங்கீகாரம் அளிக்குமா?"

பதில்:—"அதனால் ஏதாவது பயன் ஏற்படுமானால் செய்வோம்; இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள எல்லா மக்களையும் மீண்டும் ஒன்று சேர்க்க இந்தியா முயற்சி செய்கிறது என்ற புகாருக்கு ஆதாரமில்லை; தாங்கள் எந்த வழி செல்ல வேண்டுமென்று முடிவு செய்ய வேண்டியது கிழக்கு வங்க மக்களின் பொறுப்பாகும்."

ஒரிசா புயல் நிவாரணம் -- பிரிட்டன் உதவி

இலண்டன், நவ. 13—

புயலால் பாதிக்கப்பட்ட ஒரிசா மக்களுக்குத் தேவையான பொருள்களை வாங்கவும் -- அவற்றை இந்தியாவுக்குக் கொண்டு சேர்ப்பதில் உதவவும் ஆக பிரிட்டன் இந்தியாவுக்கு 25,000 பவுன்கள் (ரூ. 4,50,000) உதவி அளிக்கிறது.

இந்த உதவியை ஏற்றுக் கொண்ட இந்தியா, இதற்கு என்னென்ன பொருள்களை வாங்கலாம் என்பதில் தீவிரமாக இருக்கிறது; குறிப்பாக, காலரா மருந்துகளை அவசரமாக அனுப்புமாறு இந்தியா கேட்டிருக்கிறது; இந்த வகையில் பிரிட்டன் உடனடியாக உதவ முடியும்.

மூன்று மாநிலங்களுக்கு எக்ஸ்பிரஸ் போக்குவரத்து --- தமிழக அரசு நடத்தும்

அமைச்சர் தகவல்

உதகை, நவ. 13—

"கேரளம், மைசூர், ஆந்திரம் ஆகிய மாநிலங்களுக்குத் தமிழ்நாடு அரசு பஸ் போக்குவரத்துத் துறை, 'எக்ஸ்பிரஸ்' பஸ்களை விடும்.

"ஆந்திர அரசுடன் இது தொடர்பான பேச்சுவார்த்தைகள் முடிவடைந்துவிட்டன; மைசூர், கேரள அரசுகளுடன் பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது.

என்ற தகவலை, தமிழ்நாடு போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ். இராமச்சந்திரன் அவர்கள், உதகை நகராட்சி அளித்த வரவேற்புக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

புயல் வருவதை அறிவிக்கும் கருவி

சென்னையில் அமைக்கப்படும்

புதுடில்லி, நவ. 13—

புயல் வருவதை முன்கூட்டியே கண்டுபிடித்துத் தெரிவிக்கும் 'ராடார்' கருவி, சென்னையில் அமைக்கப்படும்.

"இன்னும் ஓராண்டுக்குள், 3 ராடார் கருவிகளும் அமைக்கப்பட்டுவிடும்" என்று மத்திய அரசின் வானிலை ஆராய்ச்சித் துறை அதிகாரி தெரிவித்தார்.

நிலங்கள்--வீடுகளுக்கு உச்சவரம்பு

இரண்டாயிரம் ரூபாய்க்குமேல் யாருக்கும் ஊதியம் இல்லை

தனியார் நிறுவனங்களில் 51 சதவீத உரிமை அரசுடைமையாகும் -- இலங்கை அரசின் புதிய நடவடிக்கை -- பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்கும் ஏற்பாடு

கொழும்பு, நவ. 11—

சீர்குலைந்து போயிருக்கும் இலங்கையின் பொருளாதாரத்தைச் சீர்படுத்த அரசு பல தீவிர நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருக்கிறது.

நிலத்திற்கு உச்சவரம்பு நிர்ணயித்து உபரி நிலங்களை நிலமில்லாதவர்களுக்குப் பகிர்ந்தளிப்பது என்றும், இதுபோல் தேவைக்கு மேற்பட்ட வீடுகள் வைத்திருந்தால் அவைகளையும் எடுத்துக்கொள்வது என்றும் அரசு முடிவு செய்திருக்கிறது.

எந்தத் தனியார் நிறுவனமாக இருந்தாலும் அதில் 51 சதவிகித பங்கினை அரசு எடுத்துக் கொள்வது என்றும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

தாக்கல் செய்யப்பட்ட வரவு--செலவுத் திட்டத்தில் மற்றும் பல பொருளாதாரச் சிக்கன — மேம்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அஞ்சல் கட்டணங்களை உயர்த்தியும், அரிசிக்குத் தந்து கொண்டிருந்த மானியத்தைக் குறைத்தும் முடிவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

இனிமேல் அரசு மருத்துவமனைகளில், வெளிப் பிரிவு நோயாளிகள், 25 சென்ட் கட்டணம் செலுத்தி மருத்துவ உதவியைப் பெற வேண்டும்.

மேலும் மாத வருமானம் ரூ. 2,000-த்துக்குமேல் யாரும் பெறக் கூடாது என்றும் உச்சவரம்பு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

உடலுழைப்புக்கு மதிப்பை ஏற்படுத்தவும், செய்யும் பணியை வைத்துக்கொண்டே அந்தஸ்தை மதிப்பிடும் போக்கை மாற்றவும், இனிமேல் பொதுத்துறை நிறுவனங்களில் பணியாற்றும் 'வெள்ளைச் சட்டை' ஊழியர்கள், ஆண்டில் ஒன்று அல்லது இரண்டு வாரங்கள் உடலுழைப்புப் பணியை மேற்கொள்ள வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது; போலீசு — இராணுவம் உட்பட நிரந்தரச் செயலாளரிலிருந்து கடைநிலை குமாஸ்தா வரையிலான எல்லா ஊழியர்களுக்கும் இது பொருந்தும்.

வருவாய் வாரியத்தின் எதிர்காலம்

நிர்வாகச் சீர்திருத்தக் குழு பரிந்துரைக்கும்

சென்னை, நவ. 13—

நாடு விடுதலை பெற்ற பிறகு மக்களின் தேவைகளையும் -- விருப்பங்களையும் நிறைவு செய்ய புதிய துறைகளும் -- நிறுவனங்களும் அரசாங்கத்தில் தோன்றியுள்ளன; அரசாங்க நிறுவனத்தில் உள்ளவர்களுக்குப் புதிய கூடுதல் பொறுப்புகள் ஏற்பட்டுள்ளன; இதன் காரணமாக, ஒரு திட்டத்துக்கு பல்வேறு துறைகளின் அனுமதி தேவைப்படும் சூழ்நிலை உருவாகியிருக்கிறது; இந்த நிலையைத் தவிர்க்க, அரசாங்க நிர்வாகம் அனைத்தையும் தீவிரம் பரிசீலனை செய்து--அரசாங்கத்தின் ஒவ்வொரு துறைக்கும் குறிப்பிட்ட அதிகாரங்களை வழங்கி -- அதிகாரத்தைப் பரவலாக்குவது அவசியமாகிறது.

நிர்வாகத்தில் காலதாமதம் ஏற்படுவதைத் தவிர்ப்பது -- லஞ்ச ஊழலை ஒழிப்பது -- நிர்வாகத் திறமையை வளர்ப்பது ஆகியவை குறித்தும் ஆலோசனை செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது; இதன் காரணமாகத் தமிழக அரசு, நிர்வாகச் சீர்திருத்தக் குழு ஒன்றை ஏற்படுத்தி, இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வழிகாணுமாறு உத்தரவிட்டிருக்கிறது.

நிர்வாகச் சீர்திருத்தக் குழுவின் தலைவராக, தமிழக அரசின் முன்னாள் தலைமைச் செயலாளர் பி. ஏ. வர்க்கீஸ் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

குழுவின் உறுப்பினர்களாக ஓய்வு பெற்ற முன்னாள் அதிகாரி சிவானந்தம் ஐ.ஏ.எஸ்., சட்டமன்ற உறுப்பினர் ஏ. ஆர். சுப்பையா முதலியார், கே. எஸ். சிவசுப்பிரமணியம் ஐ.ஏ.எஸ்., சி. வி. எஸ். மணி ஐ.ஏ.எஸ். ஆகியோர் அங்கம் வகிக்கிறார்கள்.

குழுவின் தலைவர் வர்கீஸ் நேற்று நிருபர்களுக்குப் பேட்டியளித்தார்; அவர் கூறியதாவது:—

"நிர்வாகச் சீர்திருத்தக் குழுவின் பணி தொடங்கிவிட்டது; வருவாய் வாரியத்தை ஒழித்துவிட வேண்டுமா -- அப்படி ஒழித்துவிட்டால் அதற்குப் பதிலாக மாற்று ஏற்பாடு என்ன செய்ய வேண்டும் -- என்பது குறித்துப் பரிசீலிக்கும்படி அரசு எங்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறது.

"வருவாய் வாரியத்தை எடுத்துவிட வேண்டுமா? அல்லது வேண்டாமா என்பது குறித்து வரும் பிப்ரவரி மாத இறுதிக்குள் அரசாங்கத்துக்கு அறிக்கை கொடுத்து விடுவோம்.

வருவாய் வாரியத்தில் இப்போது உள்ள 6 உறுப்பினர்களும், நில வருவாயுடன் வேறு ஒரு துறையையும் கவனித்து வருகிறார்கள்; இதனால் மாவட்டக் கலெக்டர்கள், அவர்களைத் தங்களின் எசமானராகக் கருதி அஞ்சும் நிலை இருக்கிறது; நில வருவாய்க்கு ஒரு கமிஷனரை நியமித்துவிட்டு மற்ற வாரிய உறுப்பினர்களை வட்டார ஆணையாளர்களாக நியமிக்கலாம்.

வருவாய் வாரியம் ஒழிந்து இந்த நிலை உருவானால், நிர்வாகத்துக்குத் தொடர்பு இல்லாமல் போய்விடும்; இதையும் மனதில் கொண்டு பிரச்சினையை அணுகுகிறோம்.

நிலவரிக் கணக்குகளை இலகுவாக்க மதுரை -- தஞ்சை மாவட்டக் கலெக்டர்களிடமிருந்து விவரங்கள் கேட்டிருக்கிறோம்."

பள்ளி ஆசிரியர்கட்கு தேசிய விருது

97 பேர்களுக்குக் குடியரசுத் தலைவர் வழங்குகிறார்

புதுடில்லி, நவ. 13—

இந்த ஆண்டில் தேசிய விருதுகள் பெறுவதற்காகத் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கும் 97 ஆசிரியர்களுக்கு நவ. 21-ம் நாளன்று புதுடில்லியில் நடைபெறவிருக்கும் சிறப்பு நிகழ்ச்சியின்போது குடியரசுத் தலைவர் விருதுகளை வழங்குவார்.

இந்த ஆண்டில் பரிசுபெறும் 97 ஆசிரியர்களில் 54-பேர் துவக்கப் பள்ளி ஆசிரியர்களாவர்.

37 உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களும், 6 வடமொழி ஆசிரியர்களும் விருது பெறுகிறார்கள்.

விருது பெறும் ஆசிரியர்களில் 13-பேர் பெண்களாவர்.

விருது பெறுபவர்களுக்கு ஒரு தகுதிச் சான்றிதழும், ரூ. 1,000 ரொக்கமும் அளிக்கப்படும்.

இந்த ஆண்டில் அளிக்கப்படும் விருதுகளோடு சேர்த்து இது வரை விருதுபெற்ற ஆசிரியர்களின் எண்ணிக்கை 1,202 ஆகும்.

வட்டார வளர்ச்சி அதிகாரிகள் மீது இலஞ்சப் புகார்கள்

நிலைமையைச் சீர்திருத்துவது பற்றிக் குழு பரிசீலனை

சென்னை, நவ. 13—

"தமிழ்நாட்டில் உள்ள 375 வட்டார வளர்ச்சி அதிகாரிகளில் (பி. டி. ஓ) 50-பேர்கள் மீது இலஞ்சப் புகார்களுக்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

"மேற்பார்வையிடும் அதிகாரிகள் சரியாக மேற்பார்வையிடாததுதான் அதிகாரிகளிடையே இவ்வளவு பெரிய அளவில் இலஞ்ச ஊழல் இருப்பதற்குக் காரணமாகும்.

"இந்த நிலைமையைச் சீர்திருத்துவதற்கான வழிகளை நிர்வாகச் சீர்திருத்தக் குழு ஆராய்ந்துவருகிறது"

என்று நிர்வாகச் சீர்திருத்தக் குழுவின் தலைவர் டி. ஏ. வர்க்கீஸ் தெரிவித்தார்.

நேரு பிறந்த நாள்

சென்னையில் நிகழ்ச்சிகள்

சென்னை, நவ. 13—

14—11—71-ம் நாளன்று நேரு பிறந்த நாள் விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படும்.

நவ. 14 காலை 8-30 மணியளவில் சென்னை—இராஜாஜி மண்டபத்தில் உயர் நீதிமன்ற நீதிபதி திரு. பி. ஆர். கோகுலகிருஷ்ணன் தலைமையில் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. ச. இராமச்சந்திரன் அவர்கள், 'குழந்தைகள் புத்தகக் கண்காட்சி'யினையும், 9-30 மணிக்குக் கலைவாணர் அரங்கில் திரு.ஏ.எல். சீனிவாசன் அவர்கள் தலைமையில் தொழிலாளர் நல அமைச்சர் திரு. என். வி. நடராசன் அவர்கள், குழந்தைகள் திரைப் படக் காட்சியையும் துவக்கிவைப்பார்; அன்று முழுவதும் கலைவாணர் அரங்கில் திரைப்படம் இலவசமாகக் காண்பிக்கப்படும்.

குழந்தைகள் புத்தகக் கண்காட்சியானது நவ. 14, 15 ஆகிய இரு நாட்களிலும் காலை 10 மணி முதல் மாலை 5 மணிவரை திறந்திருக்கும்.

காலை 10 மணிக்கு, லயோலா கல்லூரி பெர்ட்ரம் மண்டபத்தில் கல்லூரி மாணவர்கள் கவிதைப் போட்டி நடைபெறும்.

மாலை 3 மணிமுதல் 5 மணிவரை மாநகராட்சி நேரு விளையாட்டரங்கில் குழந்தைகள் அணிவகுப்பு நடைபெறும்.

மாநகராட்சி மேயர் திரு. சா. கணேசன் அவர்கள் தலைமையில் கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் இந்த அணிவகுப்பைத் துவக்கிவைப்பார்கள்.

மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. க. அன்பழகன் அவர்கள் விழா மலரை வெளியிடுவார்கள்.

மாலை 5-30 மணிக்குச் சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் பொதுக் கூட்டம் நடைபெறும்; கல்வி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் திரு. ம. பொ. சிவஞானம் சொற்பொழிவாற்றுவார்.

டாக்டர் திருமதி விசாலாட்சி நெடுஞ்செழியன் பரிசு வழங்குவார்.

சிறுமி காயத்ரியின் வீணை இசையும், கல்லூரி மற்றும் பள்ளி மாணவ-மாணவியரின் பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

அணு சக்தி எரிபொருள்

கல்பாக்கம் நிலையத்தில் தயாரிக்கப்படும்

புதுடில்லு, நவ. 13—

சென்னையை அடுத்த கல்பாக்கத்தில் அணு மின் நிலையம் அமைக்கப்படுவது தெரிந்ததே; இன்னும் 2 ஆண்டுகளில் இந்த அணு மின் நிலையம் உற்பத்தியைத் தொடங்கும்.

அணு மின் நிலையத்தில் ஏற்படும் கழிவுப் பொருட்களை வீணாக்காமல் -- அதிலிருந்து எரிபொருள் தயாரிக்க இந்திய அரசு திட்டமிட்டிருக்கிறது.

அணுசக்தி எரிபொருள் தயாரிக்கும் இந்தப் புதிய தொழிற்சாலைக்கான வேலைகள், 1973-ம் ஆண்டு தொடங்கும்; 1977-ம் ஆண்டில் தொழிற்சாலை உற்பத்தி தொடங்கும்.

ரூ. 3.50 கோடி செலவில் தொழிற்சாலை அமைக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

இந்தத் தொழிற்சாலையில் ஒவ்வொரு நாளும் 500 கிலோ 'யுரேனிய'மும் 2 கிலோ 'புளுடோனிய'மும் உற்பத்தி செய்யப்படும்.

ஆவலைத் தூண்டும் அளவற்ற பரிசுகள் உங்களுக்காகவே!

மொத்தப் பரிசுத் தொகை:

ரூ. 20,00,000*

மொத்தப் பரிசுகள் 5331

இன்றே வாங்குங்கள்

தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு

ஒரு சீட்டின் விலை ஒரு ரூபாய் தான்.

குலுக்கல் நாள்: 30-11-1971

முதல் சிறப்புப் பரிசு

ரூ. 2,50,000

(பொதுவாக எல்லா வரிசைகளுக்கும்)

வழக்கமான பரிசுகள் (ஒவ்வொரு வரிசைக்கும்)

ஒரு இரண்டாவது பரிசு ரூ. 1,00,000

5 மூன்றாவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. 10 ஆயிரம்	ரூ.	50,000
10 நான்காவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. 5 ஆயிரம்	ரூ.	50,000
50 ஐந்தாவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. ஆயிரம்	ரூ.	50,000
1000 ஆறாவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. நூறு	ரூ.	1,00,000
	ரூ.	3,50,000

இதுவரை தமிழ்நாடு பரிசுச் சீட்டால் உருவாகியுள்ள லட்சாதிபதிகள்: 258

வெளியீடு: இயக்குநர், செய்தி, விளம்பரத்துறை, தமிழ்நாடு அரசு, சென்னை-9

எல்லா விவரங்களுக்கும் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டு, சென்னை-2

செலவு ஒரு ரூபாய்



வரவோ பல லட்ச ரூபாய்

*5 வரிசைகள் வெளியீட்டுக்குரியது.

கோழி வளர்ப்புக்குப் புதிய திட்டம்

தமிழகத்தில் முதன்முதலாகத் துவக்கம்

குடும்பத்துக்கு மாதம் ரூ. 40 வருவாய் கிடைக்கும்

காஞ்சிபுரம், நவ. 13—

நிலமில்லாத விவசாயத் தொழிலாளர்களுக்கும் — மற்ற ஏழை மக்களுக்கும் கூடுதலான வருமானம் கிடைக்க உதவுவதற்காக செங்கற்பட்டு மாவட்ட அதிகாரிகள், இந்தியன் பாங்கியுடன் சேர்ந்து கோழி வளர்ப்புத் திட்டம் ஒன்றைத் துவக்கியிருக்கிறார்கள்; இப்படிப்பட்ட திட்டம் தமிழ் நாட்டில் துவக்கப்படுவது இதுவே முதல் தடவையாகும்.

இந்தத் திட்டத்தின் மூலம் 20 குடும்பங்களுக்குத் தலா ரூ. 10 வீதம் ஊராட்சி ஒன்றியம் கடன் வழங்கும்; ரூ. 90 இந்தியன் பாங்கி கடனாக வழங்கும்; இதை 12 தவணைகளில் கடன் வாங்குபவர்கள் திருப்பித்தர வேண்டும்.

இந்தத் திட்டத்தின் மூலம் குடும்பம் ஒவ்வொன்றுக்கும் அதிகப்படியாக மாதம் ஒன்றுக்கு ரூ. 40 வருமானம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது; திட்டம் வெற்றியடைந்தால் மற்ற பகுதிகளுக்கும் விரிவுபடுத்தப்படும்.

செவிலிமேடு கிராமத்தில் மாவட்டக் கலெக்டர் சீதாராமதாஸ் இத் திட்டத்தைத் துவக்கிவைத்தார்.

சிட்டிபாபு விழாவுக்குத் தலைமை வகித்தார்.

ஒரு பொருட்காட்சியும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

தொழிலாளர் வைப்பு நிதி

5,58,475 தொழிலாளர் பயனடைகின்றனர்

சென்னை, நவ. 12—

தொழிலாளர்களுக்கான பிராவிடண்டு நிதி—குடும்பப் பென்ஷன் சட்டம் தமிழ்நாட்டிலும், புதுச்சேரியிலும் இதுவரையில் 127 தொழில் நிறுவனங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது.

இந்தத் திட்டத்தின்கீழ், 5,58,475 தொழிலாளர்கள் பயனடைந்து வருகிறார்கள்,

ஒவ்வொரு மாதமும் சராசரியாக மொத்தம் ரூ. 93 இலட்சம் அவர்களிடமிருந்து பெறப்படுகிறது.

ஒவ்வொரு மாதமும் முன் பணமாகவும் -- இன்ஷ்யூரன்சு பிரீமியத் தொகைகளாகவும் -- இறுதியாகக் கொடுக்கவேண்டிய தொகையாகவும் ரூ. 44.75 இலட்சம் வழங்கப்படுகிறது.

உலக வங்கியிடம் ரூ. 53 கோடி கடன்

மைசூர் நில வள வங்கியின் முயற்சி

பெங்களூர், நவ. 13—

உலக பாங்கியிடமிருந்து ரூ. 53 கோடி கடன் உதவி பெறுவதற்காக மைசூர் மாநில நிலவள பாங்கியின் தூதுக்குழு வாஷிங்டனுக்குச் செல்கிறது.

இத்தகவலை அளித்த நிலவள வங்கித் தலைவர் பி. எஸ். விசுவநாதன், 'நிலமீட்சி -- நிலங்களை சமப்படுத்தல் -- இறைவைப் பாசன வசதி -- டிராக்டர்கள் -- கிணறு இறக்கும் கருவிகள் ஆகியவற்றுக்காக இப்பணம் பயன்படுத்தப்படும்' என்றார்.

ஆசிரியருக்கு மடல்

தொழிலாளர் துரோகிகளின் வன்செயல்

சிம்சன் பிரச்சினைப்பற்றி வாய் கிழியப் பேசுகின்றன -- கோயபல்ஸ் கும்பல்; ஆனால், 30—10—71 அன்று நடந்த நிகழ்ச்சி என்ன?

நான் தி. மு கழகத்தைச் சார்ந்தவன் என்ற முறையிலும், தொழிற்சங்கத்தில் முக்கிய பொறுப்பு வகிக்கின்ற காரணத்தினாலும் என்னைத் தாக்கத் திட்டமிட்டு சதி செய்திருக்கின்றனர்.

30—10—71 அன்று நான் வேலைக்குப் போகின்றபோது மாதவரம் நெடுஞ்சாலை டான் பாஸ்கோ உயர்நிலைப் பள்ளி அருகில் சிண்டிகேடர்களும் -- குண்டர்களும் என்னைத் தடுத்து, 'வேலைக்குப் போகாதே' என்று கூறியதுடன், கடுமையாகவும் தாக்கினர்; என்னைத் தாக்கியதைக் கண்டு ஓடி வந்த குரூப் லீடர் கழகத் தோழர் அரிமோகனை கத்தியால் குத்திப் படுகாயப்படுத்தினர்; நம்முடைய கழகத் தோழர்கள் பலரையும் தாக்கிப் படுகாயப்படுத்தினர்.

இதுதான் நடந்த நிகழ்ச்சியாகும்; வன்முறையாளர்கள் சிம்சன் தொழிலாளர்கள் நல்வாழ்விற்குத் தீங்கு விளைவிப்பதுடன், அரசியல் இலாபமும் தேட நினைக்கிறார்கள்; தமிழகத்தையும் வங்கமாக்க நினைக்கிறார்கள்; அவர்கள் எண்ணம் என்ன என்பதை தமிழக மக்கள் புரிந்துகொண்டு நீதி வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

ஆ. கோ. குலோத்துங்கன்
சென்னை-11

மறைவு

தஞ்சை மாவட்ட தி. மு. க. பிரதிநிதி வந்தலல்லூர் பி. ஏ. லிங்கன் அவர்களின் மாமா திருவிசநல்லூர் கோ. இராமசாமி 7—11—71-ல் இயற்கையெய்திய செய்தி வருத்தத்துடன் அறிவிக்கப்படுகிறது.

பேச்சாளர் முகவரி

விருதை ஜெயராஜ்,
24, சுந்தர நாடார் தெரு,
விருதுநகர்.
தொலைபேசி எண்: 3118.

வங்க தேச அகதிகள்.....

‘தன்மானத்துடன் தாய்நாடு திருப்ப இந்தியா உறுதி கொண்டிருக்கிறது’

‘உலக நாடுகளும் இதற்கான சூழ்நிலையை உடனடியாக உருவாக்க வேண்டும்’

‘தவறினால் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் இந்தியாவுக்கு ஏற்படும்’ — பாதுகாப்பு அமைச்சர் ஜெகஜீவன்ராம் திட்டவட்ட அறிவிப்பு

புதுடில்லி, நவ. 13—

“இந்தியாவுக்குள் வந்து குவிந்துள்ள வங்க தேச அகதிகள் தங்கள் தாய்நாடு திரும்புவதற்கான சூழ்நிலையை உருவாக்க — உடனடியாக நடவடிக்கை எடுக்க உலக நாடுகள் தவறினால், உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் இந்தியாவுக்கு ஏற்படும்.

“இந்தியா போரை விரும்பவில்லை; ஆனால், அகதிகள் பாதுகாப்பாகவும்—தன்மானத்துடனும் நாடுதிரும்ப வேண்டுமென்பதில் இந்தியா உறுதியுடன் இருக்கிறது; இந்தியாவின் இந்த நிபந்தனை ஏற்றுக்கொள்ளப்பட்டாலன்றி, எல்லையில் தயார் நிலையில் நிறுத்தப்பட்டுள்ள இந்திய இராணுவத்தைத் தன்னுடைய பாடிவீட்டுக்குத் திரும்புமாறு அழைக்கப்படமாட்டாது”

என்று, பாதுகாப்பு அமைச்சர் ஜெகஜீவன்ராம் இங்கு திட்டவட்டமாக அறிவித்தார்; மாபெரும் பொதுக்கூட்டம் ஒன்றில் அவர் பேசுகையில் மேலும் கூறியதாவது:—

“மிகப் பெரிய அளவில் குடி பெயர்ந்து இந்தியாவுக்குள் வங்க தேச மக்கள் அகதிகளாக வந்திருப்பதால், அவர்களைப் பேணிப் பராமரிக்கும் மிகப் பெருஞ்சுமை இந்தியாவுக்கு ஏற்பட்டிருக்கிறது; இதனால், வறுமை ஒழிப்புக்காக இந்தியா தீட்டிய திட்டங்கள் பாதிக்கப்பட்டு விட்டன; ஆகவே அவர்கள், தங்கள் தாயகமான வங்க தேசத்துக்கு — அவர்களது கண்ணியம், தன்மானம் பாதிக்கப்படாமல் பாதுகாப்பாகத் திரும்பிச் செல்ல அனுமதிக்கப்பட வேண்டுமென்பதில் இந்தியா ஆழ்ந்த அக்கறை கொண்டிருக்கிறது.

“போர் நம் மீது திணிக்கப்படுமானால், நமது படைகள் எதிர்த்துத் தாக்கவிருப்பது யாகியா கானின் படைகளைத்தான்; அந்த யாகியா கானே, ‘பாகிஸ்தான் படைகளைக் காட்டிலும் இந்தியப் படைகளின் தரம் உயர்ந்தது — திறமையாகப் பயிற்சி அளிக்கப்பட்டிருக்கின்றனர்’ என்று கூறியிருக்கிறார்; இது உண்மையே; நான்கூட, நமது படையினரிடையே பேசுகையில் இதனைக் குறிப்பிட்டுக் கூறி, ‘ஒரு போர் மூளுமானால், திறமை மிக்க ஒரு இராணுவத்துடன்தான் நாம் போராட வேண்டியிருக்கும்’ என்று தெரிவித்தேன்.

யாகியா கானின் சுருதி இறங்குகிறது

“இந்தியா தனது மேற்கு எல்லையில் தன் படைகளைத் திரட்டி நிறுத்தியவுடன், யாகியா கான் குரலில் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது — சுருதி இறங்கியிருக்கிறது.

“இந்த நடுக்கத்தின் விளைவாகவே, தன் பரம எதிரியான பூட்டோவுடன் யாகியா கான் கூடிக் குலவுவதாகும்.

“சீனாவுக்குச் சென்ற பூட்டோ வெறுங்கையுடன் திரும்பியிருக்கிறார்.

“சீனத் தலைவர் மாசே துங், கையை விரித்ததோடு நில்லாமல், வங்க தேசச் சிக்கலுக்கு அரசியல் தீர்வு காணும்படியாக ஆலோசனையும் கூறி அனுப்பியிருக்கிறார்; இதே ஆலோசனையைத்தான் இந்தியா இத்தனை நாளும் பாகிஸ்தானுக்குக் கூறி வந்தது.

“நாம் உறுதியுடனும் ஒற்றுமையுடனும் எந்நிலைமையையும் சமாளிக்கத் தயாராக இருக்க வேண்டும்.”

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

16--11--71

தக்கோலம்

தி. மு. க. சார்பில் அண்ணா பிறந்த நாள் விழா; மாலை 6-மணிக்கு எழில் மண்டபத்தில்; தலைவர்: சி. திராவிடமணி; பேசுவோர்: ஏ. வி. பி. ஆசைத்தம்பி, என். எஸ். பலராமன் எம்.எல்.ஏ., வேதாசலம், அ. செ. இராமநாதன், மா. செல்வராசன், கோ, கொள்ளாபுரி எம்.சி., து. கோவிந்தசாமி, மற்றும் பலர்.

மன்றோ பாலத்திற்கு அடிக்கல் நாட்டல்

சென்னை மாநகராட்சிச் சார்பில் 15—11—71 மாலை 6-மணிக்கு மேயர் திரு. சா. கணேசன் தலைமையிலும்—தொழிலாளர் நலத் துறை அமைச்சர் திரு. என். வி. நடராசன் அவர்கள் முன்னிலையிலும், கல்வி — உள்ளாட்சித் துறை அமைச்சர் நாவலர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள், அகலப்படுத்திக் கட்டப்படும் ‘மன்றோ’ பாலத்திற்கு அடிக்கல் நாட்டுவார்; வரவேற்பு: திரு. எம். எஸ். இராமச்சந்திரன் (63-வது கோட்ட உறுப்பினர்).

தமிழ்ப் பெருவிழா

தமிழ்க் கலை மன்றச் சார்பில் 14—11—71 காலை 9-மணிமுதல் இரவு 9-மணிவரையில் சென்னை அண்ணா சாலையிலுள்ள மைய நூலகத்தில், யுனெஸ்கோ ‘கூரியர்’ கண்காட்சி—புதிய புத்தகக் கண் காட்சி—‘நூலகவுணர்வு’ — புத்தக வெளியீடு—நூலகப் பாடல்கள் இசையரங்கு—மகளிர் கருத்தரங்கு—சிந்துவெளி எழுத்தாய்வுச் சிறப்புச் சொற்பொழிவு ஆகியவை நடைபெறும்; பல்வேறு நேரங்களில் தனித் தனியாக நடைபெறும் இந்தச் சிறப்பு நிகழ்ச்சிகளில், கல்வியமைச்சர் இரா. நெடுஞ்செழியன், சிலம்புச் செல்வர் ம. பொ. சி., மேயர் சா. கணேசன், கல்வித் துறைப் பிரமுகர்கள், மற்றும் அறிஞர் பெருமக்கள் கலந்துகொண்டு சிறப்புச் சொற்பொழிவாற்றுவர்.

வங்க தேசப் பிரச்சினைக்கு

அரசியல் தீர்வு

அவாமி லீக் தலைவர்களைச் சந்தித்துப் பேச யாகியா கான் முயற்சி

புதுடில்லி, நவ. 13—

வங்காள தேசப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பது சம்பந்தமாகப் பேச்சுவார்த்தை நடத்த அவாமி லீக் கட்சித் தலைவர்களைச் சந்திக்க, பாகிஸ்தான் அதிபர் யாகியா கான் விருப்பம் தெரிவித்திருக்கிறாராம்.

[ஷேக் முஜிபுர் ரகிமானின் அவாமி லீக் தற்போது சட்ட விரோதமாக்கப்பட்டிருக்கிறது]

கல்கத்தாவில் தலைமைச் செயலகம் கொண்டுள்ள அவாமி லீக் தலைவர்களுக்கு யாகியா கானின் அறிவிப்பு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் பேச்சுவார்த்தை தொடங்குவதற்குமுன் பல முக்கியமான அம்சங்கள் தெளிவுபடுத்தப்பட வேண்டும் என்று இந்த வட்டாரங்கள் கூறின.

குதர்க்க வாதத்திற்கு வித்தூன்றுகிறார்

பேச்சுக்களைத் தொடங்க யாகியா கான் விரும்புகிறாரென்றாலும், வெளிநாட்டில் வங்காளதேச அரசை அமைத்துள்ள அனைவரையும், தம்மால் பிரதிநிதிகளால் ஏற்றுக் கொள்ள முடியாது என்று தெளிவுபடுத்தியிருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்தியாவின் உறுதி

பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்காகத் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள், தானால் அங்கீகரிக்கப்பட வேண்டுமென்று இந்திய அரசு உறுதிகொண்டிருக்கிறது என்றும் சொல்லப்படுகிறது.

வங்காள தேச அரசின் நடவடிக்கைகளை இந்தியா உன்னிப்பாகக் கவனித்து வருகிறது; அதற்கும் — யாகியா கானின் அரசுக்குமிடையே தொடர்புகளை மேற்பார்வையிட இந்திய அரசு விரும்பக்கூடும்.

முஜிபுர் ரகிமானின் நிலைமை என்ன?

இதற்கிடையில் அவாமி லீக் தலைவரான ஷேக் முஜிபுர் ரகிமான் இத்தகைய பேச்சுக்களில் என்ன பங்கு வகிக்க வேண்டும் என்பது முடிவு செய்யப்பட வேண்டிய ஒன்றாகும்; அவர் தற்போது மேற்கு பாகிஸ்தானில், நாட்டு விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக இராணுவ நீதிமன்றத்தால் விசாரிக்கப்பட்டு வருகிறார்; வங்காள தேச அரசை நடத்தும் அவருடைய சகாக்கள், அவருடைய அனுமதியின்றி யாகியா கானுடன் பேச்சு நடத்தத் தயங்குகிறார்கள்.

“இராணுவ நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டாலன்றி முஜிபுர் ரகிமான் பேச்சுவார்த்தைகளில் பங்குகொள்ள முடியாது” என்று யாகியா கான் கூறுகிறார்.

வங்காள தேச அரசாங்கத் தலைவர்கள் சிறையில் அவருடன் கலந்தாலோசிக்கலாம் என்பதற்கும் யாகியா கான் ஒப்புக்கொள்ளவில்லை.

அமெரிக்காதான் முக்கியக் காரணம்

என்றாலும், யாகியா கானுக்கும் — வங்காள தேசத் தலைவர்களுக்கும் இடையே தொடர்பு ஏற்படுவது, இப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஏற்படுவதற்கான முதல் நடவடிக்கை’ என்று கருதப்படுகிறது.

இந்தத் தொடர்பு அமைவதற்கு அமெரிக்காதான் காரணம் என்று சொல்லப்படுகிறது.

வங்காள தேசத் தலைவர்கள் உறுதி

“வங்காள தேச மக்களைப் படுகொலை செய்வதற்கு அடிகோலிய பாகிஸ்தான் அதிபர் யாகியா கானை வங்காள தேசத் தலைவர்கள் சந்திக்க ஒப்புக்கொள்வது இயலக்கூடியதன்று” என்று டில்லியில் உள்ள வங்க தேசத் தூதரக வட்டாரங்கள் உறுதியாகக் கூறுகின்றன.

சந்திக்க விரும்புவதாக யாகியா கானிடமிருந்து வங்காள தேசத் தலைவர்களுக்குச் செய்தி ஏதும் அனுப்பப்பட்டதாகத் தங்களுக்குத் தெரியாது என்றும் அந்த வட்டாரங்கள் கூறின.

மேற்குப் பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கு முன் நான்கு நிபந்தனைகளை நிறைவு செய்ய வேண்டுமென்று வங்காள தேச அரசின் தற்காலிகத் தலைவர் கூறியிருப்பதை இந்த வட்டாரங்கள் சுட்டிக் காட்டின.

இந்த நான்கு நிபந்தனைகள் வருமாறு:—

1. வங்காள தேசத்தின் சுதந்திரத்தையும், ஆட்சி உரிமையையும் மேற்குப் பாகிஸ்தான் ஒப்புக்கொள்ள வேண்டும்.
2. ஷேக் முஜிபுர் ரகிமானை நிபந்தனையின்றி விடுதலை செய்ய வேண்டும்.
3. வங்காள தேசத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள எல்லா மேற்கு பாகிஸ்தானியப் படைகளையும் திரும்பப் பெறவேண்டும்.
4. வங்காளதேச மக்களின் இழப்புகளுக்கு நட்ட ஈடு செலுத்த வேண்டும்.

இந்த நான்கு நிபந்தனைகளில் எவற்றையும் தளர்த்த முடியாது” என்று வங்காள தேசத் தூதரக வட்டாரங்கள் கூறின.

14-11-1971-ந் தேதிய போனசு சட்டத் திருத்தப் போராட்ட

முதற்கட்ட ஊர்வலம்-- பொதுக்கூட்டம்

இரண்டாவது பட்டியல்

சென்னை
செ. கந்தப்பன் எம்.எல்.ஏ.
இலட்சுமணன் எம்.பி.
முன்னாள் போலீசு கண்ணன்

பள்ளிபாளையம்
பாவலர் முத்துசாமி பி.ஏ.பி.டி., எம்.பி.
என். ஏ. நடேசன்
கே. எம். பழனியப்பன்

திருவில்லிபுத்தூர்
சுருளி வேல் எம்.எல்.ஏ.
காளிமுத்து எம்.எல்.ஏ.
வி. ஏ. இராதாகிருட்டிணன் பி.ஏ.பி.எல்.

திண்டுக்கல்
அ. மு. சம்பந்தம் பி.ஏ.பி.எல்.
கோவை பெரியசாமி
துரை கலியரத்தினம் பி.ஏ.பி.எல்.

அரக்கோணம்
முன்னாள் மேயர் அப்துல் காதர்
கு. வீராசாமி

கோவை
கடலரசன்

திருச்சி
சேரன சுந்தரம் எம்.சி.

திருவொற்றியூர்
ஏ. எம். இராசா எம்.ஏ.,எம்.எல்.ஏ.
மாதவரம் வேதாசலம்

தாராபுரம்
கல்லக்குடி தம்புசாமி

புதுக்கோட்டை
காளிராசன்
பாலசுப்பிரமணியம்

குருக்கத்தி
கோ. சிங்காரம்
அ. வேணுகோபால்

கும்பகோணம்
என். கணபதி எம்.எல்.ஏ.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, [illegible] செங்குத் தெரு, சென்னை-18) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.